ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

# குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த
# ॥ ஊனேறு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# || ஊனேறு ||

## திருவேங்கட மலைத் தொடர்பு வேண்டல்

‡ஊனேறு செல்வத்து⋆ உடற் பிறவி யான் வேண்டேன்⋆
ஆனேறேழ் வென்றான்⋆ அடிமைத் திறம் அல்லால்⋆
கூனேறு சங்கம் இடத்தான் தன்⋆ வேங்கடத்துக்⋆
கோனேரி வாழும்⋆ குருகாய்ப் பிறப்பேனே (1)

ஆனாத செல்வத்து⋆ அரம்பையர்கள் தற் சூழ⋆
வான் ஆளும் செல்வமும்⋆ மண் அரசும் யான் வேண்டேன்⋆
தேன் ஆர் பூஞ்சோலைத்⋆ திருவேங்கடச் சுனையில்⋆
மீனாய்ப் பிறக்கும்⋆ விதி உடையேன் ஆவேனே (2)

பின்னிட்ட சடையானும்⋆ பிரமனும் இந்திரனும்⋆
துன்னிட்டுப் புகல் அரிய⋆ வைகுந்த நீள் வாசல்⋆
மின் வட்டச் சுடராழி⋆ வேங்கடக்கோன் தான் உமிழும்⋆
பொன் வட்டில் பிடித்துடனே⋆ புகப் பெறுவேன் ஆவேனே (3)

ஒண் பவள வேலை⋆ உலவு தண் பாற்கடலுள்⋆
கண் துயிலும் மாயோன்⋆ கழல் இணைகள் காண்பதற்கு⋆
பண் பகரும் வண்டினங்கள்⋆ பண் பாடும் வேங்கடத்துச்⋆
செண்பகமாய் நிற்கும்⋆ திருவுடையேன் ஆவேனே (4)

கம்ப மத யானை⋆ கழுத்தகத்தின் மேல் இருந்து⋆
இன்பமரும் செல்வமும்⋆ இவ் அரசும் யான் வேண்டேன்⋆
எம் பெருமான் ஈசன்⋆ எழில் வேங்கட மலை மேல்⋆
தம்பகமாய் நிற்கும்⋆ தவம் உடையேன் ஆவேனே (5)

மின் அனைய நுண்ணிடையார்⋆ உருப்பசியும் மேனகையும்⋆
அன்னவர்தம் பாடலொடும்⋆ ஆடல் அவை ஆதரியேன்⋆
தென்னவென வண்டினங்கள்⋆ பண் பாடும் வேங்கடத்துள்⋆
அன்னனைய பொற்குவடாம்⋆ அருந்தவத்தென் ஆவேனே (6)

வான் ஆளும் மா மதி போல்⋆ வெண் குடைக் கீழ்⋆ மன்னவர் தம்
கோன் ஆகி வீற்றிருந்து⋆ கொண்டாடும் செல்வறியேன்⋆
தேனார் பூஞ்சோலைத்⋆ திரு வேங்கட மலை மேல்⋆
கானாறாய்ப் பாயும்⋆ கருத்துடையேன் ஆவேனே (7)

பிறை ஏறு சடையானும்⋆ பிரமனும் இந்திரனும்⋆
முறையாய பெரு வேள்விக்⋆ குறை முடிப்பான் மறை ஆனான்⋆
வெறியார் தண் சோலைத்⋆ திரு வேங்கடமலை மேல்⋆
நெறியாய்க் கிடக்கும்⋆ நிலை உடையேன் ஆவேனே (8)

‡செடியாய வல்வினைகள்⋆ தீர்க்கும் திருமாலே⋆
நெடியானே! வேங்கடவா!⋆ நின் கோயிலின் வாசல்⋆
அடியாரும் வானவரும்⋆ அரம்பையரும் கிடந்தியங்கும்⋆
படியாய்க் கிடந்து⋆ உன் பவளவாய் காண்பேனே (9)

உம்பர் உலகாண்டு⋆ ஒரு குடைக் கீழ் உருப்பசி தன்⋆
அம் பொற் கலை அல்குல்⋆ பெற்றாலும் ஆதரியேன்⋆
செம் பவள வாயான்⋆ திருவேங்கடம் என்னும்⋆
எம் பெருமான் பொன்மலை மேல்⋆ ஏதேனும் ஆவேனே (10)

‡மன்னிய தண் சாரல்⋆ வட வேங்கடத்தான் தன்⋆
பொன்னியலும் சேவடிகள்⋆ காண்பான் புரிந்திறைஞ்சி⋆
கொன்னவிலும் கூர்வேல்⋆ குலசேகரன் சொன்ன⋆
பன்னிய நூல் தமிழ் வல்லார்⋆ பாங்காய பத்தர்களே (11)

‖ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com